C.M.P. No. 7762/2022 **நாள் : 09.11.2022.**

**புகார்தாரர் திரு. மகாலிங்கம்**

**<u>புகார்தாரரின் சத்தியப்பிரமாண வாக்குமூலம்</u>**

**தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், எம்.ஒட்டப்பட்டி அஞ்சல், வசிக்கும் வஜ்ஜிரவேல் என்பவரின் மகன், மகாலிங்கம் வயது (52) ஆகிய நான் சத்தியப்பிரமானத்தின்பேரில் கூறுவது யாதெனில் :-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்துக் கொண்டு டெய்லர் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் நான் புகார்தாரர் ஆவேன். எனது மகன் பொன்மணி என்பவர் சேலத்தில் ஓட்டல் மேனேஜ்மெண்ட் துறையில் பணிபுரிந்து வந்தார். கொரோனா காலத்தில் நாங்கள் எனது மகனை வீட்டுக்கு வருமாறு அழைத்தோம். அவர் வந்தார். எனது மகன் வீட்டுக்கு வந்திருந்த சமயத்தில் எங்கள் ஊரை சேர்ந்த சரோஜா, சந்திரமதி, சௌரியா ஆகியோர் எனது மகனை தேங்காய் தள்ள வேண்டும் என்று எனது மகனின் செல்போன் மூலம் தொடர்பு கொண்டு கூப்பிட்டார்கள். நான் வீட்டில் இல்லாத சமயம் எனது மகனை மேற்கண்ட சரோஜா, சந்திரமதி, சௌரியா ஆகியோர் எனது வீட்டுக்கு வந்து எனது மகனின் கையைப் பிடித்து தேங்காய் தள்ள வேண்டும் என்று கூறி அழைத்துச் சென்றுவிட்டார்கள். எனது மகனுக்கு தேங்காய் மரம் ஏறத் தெரியாது. எனது மகன் கொஞ்சம் உடற்பருமனாக இருந்தார். அவரால் தேங்காய் மரம் ஏற முடியாது என்று தெரிந்தும் அவரை கட்டாயப்படுத்தி எதிரிகள் மூவரும் மரம் ஏறச் சொன்னார்கள். எனது மகள் ஆர்த்தி என்பவரும் எனது மகனுடன் சென்றுள்ளார். ஆனால் எனது மகளை எதிரிகள் துரத்திவிட்டார்கள். சிறிது நேரம் கழித்து அக்கம் பக்கம் இருந்த நபர்கள் மற்றும் எனது மகள் ஆகியோர் ஓடிவந்து எனது மகனை பின் தலையில் எதிரிகள் வெட்டிவிட்டதாக கூறினார்கள். வெட்டுப்பட்ட எனது மகனை அக்கம் பக்கத்தினர் ஆம்புலன்ஸ் மூலம் தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆம்புலன்ஸ் வருவதற்குள் எதிரிகள் மூவரும் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். நான் எனது மகனை கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தேன். பின்னர் மூன்று நாட்கள் கழித்து எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தேன். வீட்டுக்கு அழைத்து வந்த பின்னர் எனது மகன் இறந்துவிட்டார். எனவே எனது மகனை கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்று வெட்டி கொன்ற எதிரிகள் சரோஜா, சந்திரமதி, சௌரியா ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.